**தலைப்பு 320 – சிவில் பாதுகாப்புத் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 யூன் 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தம்பர் 15 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு இலங்கை கடற்படையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய வருடத்தில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக்கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியளவில் திணைக்களத்திற்கு சொந்தமான 163 வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டடு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து வாகனங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் எஞ்சிய வாகனங்களை மதிப்பீடு செய்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | கணனி உபகரணங்கள், இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் தொடர்பாடல் உபகரணங்கள் ஆகிய சொத்துக்கள் தனித்தனியாக இனங்காணாது அலுவலக உபகரணங்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | சொத்துக்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டும். | தனித்தனியாக அறிக்கையிடுவதற்குரிய பணிகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிறுவனத்தின் கணக்குகளை அறிக்கையிடும் அடிப்படையில் கருத்திற்கொண்டு செயற்திட்டங்களில் பேணப்படும் நீண்ட கால பயிர்களின் பெறுமதி, நிதிக்கூற்றுக்களினுள் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களினுள் உரிய பெறுமதியை சரியாக அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணிகளின் உரித்து திணைக்களத்திடம் காணப்படாமையால் மேலதிக அறிவுரைகளை பெற்று எதிர்காலத்தில் புத்தகங்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆணட்டிற்கான பாதீட்டினை தயாரிக்கும் போது உரிய முறையில் எதிர்வுகூறாமையால் 03 சந்தர்ப்பங்களில் நிதிப்பிரமாணம் 66 இன் படி 07 செலவின விடயங்களுக்காக ரூபா 21.50 மில்லியன் நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்தது. | மதிப்பீடுகள் கூடியளவு துல்லியமானதாக தயாரிக்கப்பட வேண்டும். | கிடைத்திருந்த நிதியேற்பாடுகள் நி.பி.66 இன் கீழ் மாற்றுவதன் மூலம் நிதியேற்பாட்டு தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | 04 செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடுகளில் 11.6 சதவீதம் முதல் 65.8 சதவீதம் வரையான வீச்சில் நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்தன. | மதிப்பீடுகளை எதிர்வுகூறல் மற்றும் செலவினம முகாமைத்துவம் ஆகியன இயலுமானவரை துல்லியமாக மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய சேமிப்புகளுக்கு போதியளவு கட்டுநிதி கிடைக்காமை காரணமாக அமைந்திருந்தது. |

## 2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்காக 4 செலவின விடயங்களுக்குரிய ரூபா 1.83 மில்லியனான பொறுப்புக்களின் பெறுமதியில், 2020 மே 31 ஆந் திகதி வரையிலும் எவ்வித தொகையும் தீர்க்கப்பட்டிருக்காததுடன், 7 செலவின விடயங்கள் தொடர்பில் பொறுப்புகளின் பெறுமதியில் 50 சதவீதத்திற்கும் குறைவாக தீர்க்கப்பட்டிருந்தது. | கடந்த வருடத்திற்குரிய பொறுப்புகள் துரிதமாக தீர்க்கப்பட வேண்டும்.. | கொடுப்பனவுகளுக்காக பட்டியல்கள் முன்வைக்கப்படாமையால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 2.3 ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டிலான பயன்பாடு

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்ட பணிகளிடையே 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ‘‘கிராமிய குளங்களின் நீர்த் தாவரங்களை அகற்றுதல்’’ அம்பாறை மாவட்ட நிகழ்ச்சித்திட்டம், மின்சார வேலி நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பு மேற்பார்வைக்காக எரிபொருள் கட்டுப்பாடு, ‘‘நாட்டிற்காக ஒன்றிணைவோம்’’ மொனராகலை மாவட்ட நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சுவசிரிபாய வளாகத்தினை அலங்காரப்படுத்தும் | நிதிச் செயலாற்றல் மற்றும் பௌதீக செயலாற்றல் ஆகியவற்றை ஒரே மட்டத்தில் பேணிச் செல்லப்பட வேண்டும். | கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக போதியளவான கட்டுநிதி திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்படாமை காரணமாக அமைந்திருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

நிகழ்ச்சித்திட்டம் ஆகிய பணிகளின் செயன்முன்னேற்றம் முறையே 3.5 சதவீதம், 77 சதவீதம், 67 சதவீதம், 61 சதவீதம் மற்றும் 58 சதவீதமாக காணப்பட்டது.

## 2.4 முற்பணக் கணக்கு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இணக்கக்கூற்றின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந திகதியில் உள்ளபடியான சேவையை கைவிட்டுச் சென்ற 430 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 13.77 மில்லியன் பெறுமதியான அறவீடுகள் நிலுவையாக காணப்பட்டது. அவற்றுள் ரூபா 5.29 மில்லியன் தொகை 1 – 2 வருடங்களுக்குட்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பகின்றதுடன், நிலுவைக் கடனை அறவீடு செய்தல் மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பந்தியின் விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைக் கடன் மீதிகளை அறவிட எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமொன குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மோல்ப்பே பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட திணைக்களத்தின் தலைமைக் கட்டிடத்தில் அடிப்படைத் திட்டத்திற்காக இது வரையிலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய அங்கீகாரங்களை பெற்று நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது என குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 3.2 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான பௌதீக வளங்கள், மனிதவளங்கள் மற்றும் உள்ளக நிதி ஆகியவற்றைப் பயன்படுத்தி 22 படையணிகள் மற்றும் 05 பயிற்சிப் பாடசாலைகள் மூலம் பல்வேறு தன்மையிலான செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடாத்திச் செல்லப்படுகின்ற போதிலும், திணைக்களம் தமது தூரநோக்கு, செயற்பணி மற்றும் பணிகளின் கீழ் அவ்வாறான செயற்திட்டங்களை நடாத்திச் செல்லல் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | திணைக்களம் தமது தூரநோக்கு, செயற்பணி மற்றும் பணிகள் ஆகியவற்றை நிகழ்கால தேவைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும். | நாட்டில் நிலவிய யுத்த நிலைமை நிறைவடைந்த பின்னர், திணைக்களத்தின் ஆண்/பெண் படையினரை ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்தும் நோக்கில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் படையணிகள் மற்றும் பயிற்சிப் பாடசாலைகளில் விவசாயம், கால்நடை மற்றும் பல்வேறு செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

### 3.3 பெறுகைகள்

---------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டின் போது அத்தியாவசிய தேவைப்பாட்டினை விஞ்சி 2,577 பச்சை நிற கெமா தொப்பிகள், 5,111 சோடிவிளையாட்டு காலணிகள், 36,104 தலையணை உறைகள், 36,104 மெத்தை விரிப்புகள் மற்றும் 604 நுளம்பு வலைகளை கொள்வனவு செய்வதற்காக முறையே ரூபா 0.75 மில்லியன், ரூபா 15.77 மில்லியன், ரூபா 9.96 மில்லியன், ரூபா 849.82 மில்லியன் மற்றும் ரூபா 1.36 மில்லியன் கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது. | தேவைப்பாடு உரிய முறையில் இனங்காணப்பட்டு சிக்கனமான முறையில் மற்றும் செயற்திறனுடன் செலவினம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | விசேடமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்கு மேலதிகமான அளவினை வைத்திருத்தல் அவசியமென குறிப்பிடப்பட்டிருந்தது. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.2.2 இன் பிரகாரம், ஒவ்வொரு நிதியாண்டினதும் மார்ச் 15 ஆந் திகதிக்கு முன்னர் கடந்த வருடத்திற்கான பொருள் மெய்மையாய்வு பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், 2019 நிதியாண்டிற்காக சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டிருந்த மதிப்பாய்வுச் சபைகள் 34 இல் 2020 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் 31 சகைள் மாத்திரம் தமது பணிகளை நிறைவு செய்திருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம், ஒவ்வொரு நிதியாண்டினதும் மார்ச் 15 ஆந் திகதிக்கு முன்னர் கடந்த வருடத்திற்கான பொருள் மெய்மையாய்வு பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டும். | நாட்டில் நிலவிய பாதகமான நிலைமையின் அடிப்படையில் பொருள் மெய்மையாய்வு பணிகளை நிறைவு செய்ய முடியாதிருந்ததாகவும், 2020 யூலை 31 ஆந் திகதிக்கு முன்னர் நிறைவு செய்ய முடியும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது |

## 3.5 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மஹாஓயா படையணியின் செங்கல் உற்பத்தி செயற்திட்டத்தில் 782,326 செங்கல்களின் பற்றாக்குறையால் ஏற்பட்ட நட்டத்தை பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு விசாரணை சபையினால் 2018 யூலை 03 ஆந் திகதி வரையிலும் பரிந்துரை செய்யப்பட்டிராததுடன், நட்டத்தினை அறவீடு செய்ய இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இழப்புகள் மற்றும் நட்டங்களை அறவீடு செய்ய துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவிட தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வாறு உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சிரேஷ்ட, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலைகயில் முறையே 05, 39, 48 மற்றும் 4,265 ஆகும். மீளாய்வாண்டிற்காக சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் ஆளனி வேதனங்கள் செலவினத் தொகுதியின் கீழ் ரூபா 16,002.55 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம், வருடாந்த தனிநபர் செலவினம் ரூபா 0.44 மில்லியனாக இருந்தது. | காலத்திற்கு எற்ற வகையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மாற்றுதல் அல்லது பதவியணியை பொருத்தமானவாறு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |